## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.611/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திருமதி. பிளாரட்லியோன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of May 2026.

நான் சோமநாதபேரியில் வசித்து வருகிறேன். பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியை தெரியும். காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக மனுதாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். கடந்த 01.03.2018 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் ஆஜர் எதிரி அவருடன் அன்னம்மாள் என்பவரை கூட்டிக் கொண்டு வந்து எனது வீட்டில் வந்து எனது தம்பியை கேட்டதாகவும், அதற்கு நீங்கள் அவர் பள்ளிக் கூட வேலைக்கு சென்றுவிட்டதாக

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.05.22 17:06:07 +0530

கூறியதாகவும், உடனே ஆஜர் எதிரி உங்களையும், உங்களது அம்மாவையும் தகாத வார்த்தையால் பேசி உங்களது தம்பியை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், மேற்படி சம்பவம் குறித்து மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு, தற்சமயம் எதிரி தெரிந்தவர் என்பதாலும் அவருடன் சமரசமாக செல்வதாலும் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.05.22 17:05:54 +0530